

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் கொண்டத்தூர், பாடசாலை ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும். பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் உமா மகேஸ்வரி, செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எம். அன்பழகன் மற்றும் பலர் உள்ளனர்





நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் நாகையில் டி.பி.ஜி. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரி முத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இலமேகநாதன், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், நகரக் கழக அவைத்தலைவர் இரா முருகையன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற கழக புதிய உறுப்பினர் சேர்ப்பு திட்டத்தின்படி

# தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக உறுப்பினர் சேர்க்கை படிவம் வழங்குதல் மற்றும் ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!



தருமபுரி, ஜூன். 19-

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி. பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 01.06.2025 அன்று மதுரையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானமான மண் மொழி மானம் காத்திட "ஓரணியில்; தமிழ்நாடு" என்ற கழக புதிய உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை சட்;டமன்றத் தொகுதி வாரியாக தொடங்கும் விதமாக தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக சட்டமன்றத் தொகுதி வாரியாக உறுப்பினர் படிவம் வழங்கி ஆலோசனை கூட்டம் இன்று (19.06.2025 வியாழக்கிழமை) அன்று, காலை 10.00 மணியளவில் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, பாலக்கோடு பேரூராட்சியில் உள்ள நந்தாஸ் பேலஸிலும்;,

பிற்பகல் 12.30 மணிக்கு அரூர் சட்டமன்றத் தொகுதி, அரூர் பேரூராட்சியில் உள்ள என்.என். மஹாலிலும்,

பிற்பகல் 3.30 மணிக்கு பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, பொம்மிடி ஊராட்சியில் உள்ள மணி மஹாலிலும், மாவட்ட கழக அவைத்தலைவர் மு.மனோகரன்,; தலைமையிலும், மாநில விவசாய அணி துணை செயலாளரும், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான டி.எம்.அரியப்பன், மாநில அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளரும், அரூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான சி.செல்லதுரை, திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான எவரெஸ்ட் என்.நரேஷ்குமார் ஆகியோர்களின் முன்னிலையிலும் இக்கூட்டம் நடைபெறும்.

அதுசமயம், நாடாளுமன்ற உறுப்பினர், அந்தந்த தொகுதிக்குட்பட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தேர்தல் குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள்(BDA), பாக இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இடங்களில் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. "ஓரணியில் தமிழ்நாடு" கழக உறுப்பினர் சேர்க்கை படிவம் வழங்கி ஆலோசனைகள் வழங்குதல்.

2. 2026 சட்டமன்றத் தேர்தல், கழக ஆக்கப்பணிகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்தும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கரூர் சட்டமன்ற தொகுதி, மண்மங்கலம் அரசு மருத்துவமனையில், ரூ 3.50 கோடி மதிப்பில் கூடுதல் கட்டிடங்கள் கட்டும் பணிகளை சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், க.சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ., அரசு டாக்டர்கள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அருகில் உள்ளனர்.

### சேலம் மத்திய மாவட்டத்தில்

# தொகுதி வாரியாக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



சேலம், ஜூன், 19-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா. இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து சேலம் மத்திய மாவட்டக் கழகத்திற்குட்பட்ட ஓமலூர், சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பாக நிலை முகவர்கள் (BLA-2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பார்.இளங்கோவன், ஓமலூர் தொகுதி பார்வையாளர் ஈ.ஜி.சுகவனம், சேலம் மேற்கு தொகுதி பார்வையாளர் பெத்தாம்பாளையம் இராஜசேகரன் மற்றும் சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மரு.விவேக் ஆகியோர் முன்னிலையில் கீழ்கண்ட தேதிகளில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய, பகுதிகளின் பொறுப்பாளர்கள், மாநகர வட்டக் கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, மற்றும் பேரூர் அமைப்பாளர் மற்றும்

துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**நாள்: 23. 06. 2025**

சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி -காலை 10.00 மணி - DSK திருமண மண்டபம், இரும்பாலை மெயின்ரோடு.

ஓமலூர் சட்டமன்றத் தொகுதி - பிற்பகல் 03.00 மணி - M.R.P திருமண மண்டபம், ஓமலூர்.

**24. 06. 2025**

சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி -காலை 10.00 மணி - கொங்கு திருமண மண்டபம், அம்மாபேட்டை.

சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி -பிற்பகல் 03.00 மணி - மாநகராட்சி தொங்கும் பூங்கா.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மத்திய ஒன்றியம் மோளையானூரில் ரூ.66 லட்சம் மதிப்பிட்டில் புதியசாலை அமைக்கும் பணியினை தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி தொடங்கிவைத்தார். உடன்தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், ஒன்றிய திமுக செயலாளர் சி.முத்துக்குமார், பி.எஸ். சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன், மாநில நிர்வாகி அ. சத்தியமூர்த்தி,தலைமை கழக பேச்சாளர் இராசு.தமிழ்செல்வன்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏழாஞ்சேரி கெ. வரதன்

### ஜூன் 19 (2003)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்திலும் பின்னர், கழகம் துவங்கிய பின், கிளைச் செயலாளர், செய்யாறு வட்டச் செயலாளர், வெம்பாக்கம் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

1977–ல் காஞ்சிபுரத்தில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவின் "நீதிதேவன் மயக்கம்" நாடகத்தில் நடித்தவர்.

ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகள் வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற ‘இந்தி எதிர்ப்பு போராட்டத்தில்’ காஞ்சிபுரம் அருகே உள்ள நத்தப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட்டு ஆறுமாத கடுங்காவல் தண்டனையை கடலூர் சிறையில் அனுபவித்ததோடு, நெருக்கடி கால மிசாவில் கைது செய்யயப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்! என்.ஆர். இளங்கோ எம்.பி. சட்ட நூல்கள் வழங்கி சிறப்புரை!

# 102 இளம் வழக்கறிஞர்கள் கோவை சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்தல்!வழக்கறிஞர் சேமநல நிதிகாப்பீட்டு நிதி!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

கோவை ஜூன். 19-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு, தி.மு.க. சட்டத்துறை மற்றும் முத்தமிழ் அறிஞர் வழக்கறிஞர் பாசறை சார்பில் 102 இளம் வழக்கறிஞர்களை கோயம்புத்தூர் வழக்கறிஞர் சங்கத்தில் உறுப்பினராக சேர்த்தல் மற்றும் வழக்கறிஞர் சேமநல நிதி,காப்பீட்டு நிதி மற்றும் சட்ட நூல்கள் வழங்கும் விழா நாளை 20.6.20025 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் தி கிராண்ட் ரெஜின்ட் (The Grand regent ) அவிநாசி சாலை கோயம்புத்தூரில் நடைபெறுகிறது.

விழாவில் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ உறுப்பினர் சேர்க்கை, வழக்கறிஞர் சேமநல நிதி மற்றும் காப்பீட்டு நிதி ஆகியவற்றுக்கான காசோலைகளை வழங்கி உரையாற்றுகிறார்.

கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி இளம் வழக்கறிஞர்களுக்கு சட்ட நூல்கள் வழங்கி, சமூக நீதிக்கான சட்ட திருத்தங்களும் திராவிட இயக்கமும் எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.


நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கோவை மாவட்ட முதன்மை அரசு வழக்கறிஞர் அருள் குமார் செய்துள்ளார்.

இதில் இளம் வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞர்கள் வழக்கறிஞர்கள் அணி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பா. சாரதி

### ஜூன் 19 (1976)



வடாற்காடு மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும் – மாவட்ட அவைத்தலைவராகவும் பணிபுரிந்தவர்.

வேலூர் நகர்மன்றத்தில் இருபது ஆண்டு காலமாக உறுப்பினராகவும், மூன்று முறை நகராட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாண்டு காலம் சட்டமன்றப் பணிகளை செவ்வனே ஆற்றி, தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி மக்களுக்காக பேரவையில் வாதாடி, குறைபாடுகளை நிவர்த்தி செய்தவர்.

"பெயரால், புகழால், வல்லமையால், செல்வாக்கால், உருவத்தால் யானையென அவர் இருந்தாலும், கழகத்தின் கட்டளையெனும் அங்குசத்துக்கு அடங்கியன்றோ பணி குவித்தார்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**